**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.43/2020 - DW-1**

| | |
|---|---|
| Name | திரு.தீபக் கோத்தாரி |
| Husband/Father Name | திரு.கோதாரி |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **06.04.2026.**

ஆவணம் தாக்கல் செய்ய 2-ம் பிரதிவாதி தரப்பில் இன்று மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி:-**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்திருந்த C.S.No.443/2018 வழக்கில் 19.11.2020-ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.1** ஆகும்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

வழக்கு சொத்து வாதிக்கு சொந்தமானது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண், கதவு எண், தெரு பெயர் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் உள்ள கட்டிடத்தின் மொத்த விஸ்தீரணம் 5,125 ச.அடி ஆகும். வழக்கு சொத்தின் அடி மனையின் விஸ்தீரணம் 3000 மற்றும் அதற்கு கூடுதலான சதுர அடி ஆகும். வழக்கு சொத்தில் உள்ள கட்டிடம் எந்த திசையை பார்த்து உள்ளது என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் வாதி தான் இன்று வரை குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கான சொத்து வரி விதிப்பு, மின்சார இணைப்பு மற்றும் பட்டா இன்று வரை வாதியின் பெயரில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு என் பெயரில் சொத்து வரி விதிப்பு, மின்சார இணைப்பு மற்றும் பட்டா இல்லை. வாதி 1-ம் பிரதிவாதி நிறுவனத்திடமிருந்து முதலில் 2011-ம் ஆண்டில் ரூ.60 லட்சம் கடன் வாங்கினார். 1-ம் பிரதிவாதி நிறுவனம் மூலம் நானும், 3-ம் பிரதிவாதியும் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வந்தோம். 1-ம் பிரதிவாதி நிறுவனம் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்வதற்க அரசாங்கத்தில் உரிமம் வாங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மத்திய ரிசர்வ் வங்கியில் உரிமம் பெறவில்லை. வாதி பெற்ற ரூ.60 லட்சம் கடனில் அவர் செலுத்த வேண்டிய சுமார் ரூ.6,85,000/- மற்றும் அவர் புதிதாக 2011 ஜூன் மாதத்தில் பெற்ற ரூ.13,15,000/- கடன் சேர்த்து மொத்தம் ரூ.20 லட்சம் 2-வது கடனாக வாதி 1-ம் பிரதிவாதி நிறுவனத்திடமிருந்து பெற்றார். வாதி மொத்தம் ரூ.80 லட்சம் கடன் பெற்றார். வாதி பெற்ற ரூ.80 லட்சம் கடனுக்கு வட்டிக்காக மட்டும் ரூ.18,30,000/- செலுத்தியுள்ளார். அசல் கடன் ரூ.80 லட்சத்தில் வாதி எந்த

தொகையும் திரும்ப செலுத்தவில்லை. வாதி எங்களுக்கு தர வேண்டிய அந்த கடன் தொகையை கேட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து உத்தரவு பெற்றுள்ளோம். அதில் வாதி ஆஜராகி வழக்கு நடத்தவில்லை என்றால் சரிதான். ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி வாதி தாக்கல் செய்த மனு நிலுவையிலுள்ளது என்றால் சரிதான். வாதி என் பெயருக்கு வழக்கு சொத்து சம்மந்தமாக பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார். வாதி பெற்ற கடனுக்கு அடமான கடன் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சென்னை உயர்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள C.S.No.443/2018 வழக்கு கடன் தொகையை வசூல் செய்வதற்காக நான் தாக்கல் செய்த வழக்கு என்றாலும், அடமான கடன் பத்திரத்தின் பேரில் அடமான சொத்தின் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு அந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி எனக்கு எழுதிக் கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் 4-ம் பிரதிவாதிக்கு நான் வழக்கு சொத்தை பொறுத்து கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 4-ம் பிரதிவாதி என் உறவினர் இல்லை. அவர் எனக்கு தெரிந்த நபர். அந்த கிரைய ஆவணம் பதிவு செய்வதற்கு முன்பு வாதியின் அடமான கடன் பைசல் ஆகிவிட்டதாக அடமான பைசல் ரசீது பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதியின் அடமான கடன் பைசல் ஆகிவிட்டது என்றால் சரிதான். (சாட்சி தற்போது கிரையப்பத்திரம் பதிவு செய்ய வேண்டும் என்றால் அடமானக்கடனை முடிக்க வேண்டும் என்பதால் வாதியிடம் பணம் பெறாமலேயே அடமான பைசல் ரசீது பதிவு செய்ததாக கூறுகிறார்.) வழக்கு சொத்தை 4-ம் பிரதிவாதிக்கு ரூ.28 லட்சத்திற்கு கிரையம் செய்தேன். அந்தப் பணத்தை வாதி கொடுக்க வேண்டிய கடனில் வரவு வைத்துள்ளேன். அதற்கான வரவு செலவு கணக்கு புத்தகங்களை நாங்கள் பராமரித்து வருகிறோம். அந்தத் தொகையை வருமான வரி கணக்கிலும் காண்பித்துள்ளோம். வரவு செலவு கணக்கு புத்தகங்கள் மற்றும் வருமான வரி கணக்கை நான் தாக்கல் செய்தால் உண்மை விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு சொத்தை நான் விற்பனை செய்ததற்கு வாதிக்கு கணக்கு காண்பித்தேனா என்றால் வழக்கு சொத்தை விற்பனை செய்த விவரத்தை வாதிக்கு வாய்மொழியாக தெரிவித்தேன். வழக்கு சொத்தை விற்ற வகையில் கிடைத்த பணத்தை சென்னை நீதிமன்ற வழக்கில் கழித்து காண்பித்து அந்த வழக்கை தாக்கல் செய்தேன். வழக்கு சொத்தில் ரூ.42 லட்சம் மதிப்புள்ள கட்டிடம் இருப்பதாக அதற்கு மதிப்பீடு செய்து முத்திரை கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் கிரையம் பெற்றவர் செலுத்தியிருக்கலாம். வழக்கு சொத்திற்கு அடி மனைக்கு 24 லட்சமும், அதிலுள்ள கட்டிடத்திற்கு ரூ.42 லட்சமும் ஆக மொத்தம் ரூ.66 லட்சத்திற்கு மதிப்பீடு செய்து கிரையப்பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ரூ.66 லட்சத்தை வாதியின் கடன் கணக்கில் வரவு வைக்கவில்லை என்றால் சரிதான். வாதி வழக்கு சொத்தை என்னிடமோ அல்லது 4-ம் பிரதிவாதியிடமோ ஒப்படைக்காததால் 4-ம் பிரதிவாதி ரூ.28 லட்சம் மட்டும் என்னிடம்

கொடுத்துள்ளார். பாக்கி கிரையத் தொகையை அவர் என்னிடம் கொடுக்கவில்லை. 4–ம் பிரதிவாதி பாக்கி கிரையத் தொகை ரூ.38 லட்சம் எனக்கு கொடுக்க வேண்டும். வா.சா.ஆ.3 பொது அதிகார ஆவணத்தை வாதி என் பெயருக்கு காலி மனையை பொறுத்து மட்டும் தான் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் கட்டிடம் இருப்பதை வாதி காண்பித்து அந்த பொது அதிகார ஆவணத்தை எழுதிக் கொடுக்கவில்லை. வா.சா.ஆ.2 அடமான கடன் பத்திரம், வா.சா.ஆ.4 கிரைய ஒப்பந்தப்பத்திரம், வா.சா.ஆ.5 அடமான கடன் பைசல் ரசீது, வா.சா.ஆ.7 கிரையப்பத்திரம் ஆகிய அனைத்திலும் காலி மனை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்திலுள்ள கட்டிடத்தை விற்பனை செய்ய எனக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. கிரையப்பத்திரம் பதிவு செய்த பிறகு 4–ம் பிரதிவாதி அவராக சென்று வழக்கு சொத்திலுள்ள கட்டிடத்திற்கு உபரி முத்திரை கட்டணம் செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். நானும், இதர பிரதிவாதிகளும் பைனான்ஸ் தொழில் நடத்தியதில் பல முறைகேடுகள் செய்து அதன் விளைவாக எங்கள் மீது குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் குற்ற வழக்கு உள்ளது. அந்த வழக்கு பொய் வழக்கு ஆகும். நான் ஜி.எஸ்.டி கமிஷ்னர் என்று கூறிக்கொண்டு பல நபர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு ஏமாற்றியதாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் ஒரு நபர் தான் என் மீது பொய்யான புகார் கொடுத்து அந்த புகாரும் பொய்யானது என்று முடிக்கப்பட்டுவிட்டது. பிற குற்ற வழக்குகள் சம்மந்தமாக நான் சிறையில் இருந்ததில்லை. வாதி கடனுக்காக அடமானமாக கொடுத்த சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக நான் மோசடியான கிரையப்பத்திரத்தை எனக்கு வேண்டிய 4–ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் தவறு. வழக்கு சொத்தின் மதிப்பு ரூ.1–1/2 கோடி பெறத்தக்கது என்றாலும், அதை அபகரிக்க நான் முயற்சிக்கிறேன் என்றாலும் தவறு. ஒருவேளை வாதி வழக்கு சொத்தை விற்பனை செய்ய எனக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்திருந்தாலும், நான் விற்பனை செய்து பெற்ற கிரையத் தொகையை வாதியின் கடனில் கழிக்காமல் முழுத் தொகைக்கும் சென்னையில் வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பொது அதிகார ஆவணம் வழக்கு சொத்தின் அடி மனைக்கு மட்டுமே செல்லும் என்றாலும், அதிலுள்ள கட்டிடத்திற்கு செல்லாது என்றாலும் சரியல்ல. இன்றைய தேதி வரை வாதி வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் இருப்பதால் அவரது சுவாதீனத்தை இடையூறு செய்ய எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.